இனிமையான குழந்தைகளே! ஆத்மா எனும் தீபத்தில் யோகம் எனும்

கேள்வி: ஆத்மா எனும் பேட்டரியில் (மின்கலத்தில்) சக்தியை நிரப்புவதற்கான ஆதாரம் என்ன?

பதில்: ஆத்மா எனும் பேட்டரியில் சக்தியை நிரப்புவதற்காக புத்தி யோகத்தின் பலம் தேவை. புத்தியின் தொடர்பின் மூலம் சர்வசக்திவான் தந்தையை நினைவு செய்யும்போது பேட்டரியில் சக்தி நிரம்பும். எதுவரை பேட்டரியில் சக்தி நிறைவதில்லையோ அதுவரை ஞானமும் கூட தாரணை ஆக முடியாது. ஆத்மாவில் முழுமையான பிரகாசம் வருவதற்கு சிறிது காலம் தேவைப் படும். நினைவு செய்ய செய்ய பிரகாசம் வந்து விடும்.

பாடல்: இரவு நேர பிரயாணியே களைத்து விட வேண்டாம். . .

ஓம் சாந்தி. குழந்தைகள் பாடலின் அர்த்தத்தைக் கேட்டீர்கள், குழந்தைகளாகிய நீங்கள் இப்போது பகலில் செல்வதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். புதிய உலகத்திலோ பிரகாசமே பிரகாசமாக இருக்கும். பழைய உலகத்தில் காரிருளாக உள்ளது. இது பிரம்மாவின் அடர்ந்த காரிருள் நிறைந்த இரவாகும். நீங்கள் இப்போது பகலை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறீர்கள். இந்த புத்தியின் தொடர்பை ஈடுபடுத்தி ஈடுபடுத்தி களைத்து விட வேண்டாம் என தந்தை குழந்தைகளுக்கு சொல்கிறார். எவ்வளவு நீங்கள் நினைவின் தொடர்பின் ஈடுபடுகிறீர்களோ அவ்வளவு பிரகாசம் ஏற்படும். ஆத்மா எனும் தீபத்தின் அணைந்து போன சுடர் வந்தபடி இருக்கும். அந்த மின்சாரத்தில் சட்டென கரண்ட் (மின்னோட்டம்) வந்து விடுகிறது. ஆனால் ஆத்மாவில் முழுமையான வெளிச்சம் வருவதற்கு சிறிது காலம் தேவைப்படுகிறது. இறுதியில் முழுமையாக வந்து விடும். நினைவின் தொடர்பை ஈடுபடுத்தியபடி இருக்க வேண்டும். காரின் பேட்டரி இரவுக் குள் நிறைந்து விடுகிறது. அதுபோல இதுவும் கார் போன்றது. இதில் இப்போது பெட்ரோல் தீர்ந்து விட்டிருக்கிறது அதாவது சக்தி குறைந்து விட்டுள்ளது. பாபாவை சக்தி மிக்க சர்வசக்திவான் என சொல்லப்படுகிறது அல்லவா. புத்தியின் யோக பலம் இன்றி இந்த பேட்டரியில் சக்தி வரமுடியாது. சர்வசக்திவான் பாபாவின் நினைவில் ஈடுபடுவதன் மூலமே பேட்டரி முழுமையாக நிறையும் பேட்டரி சக்தி நிறையாமல் ஞானமும் தாரணை ஆகாது, ஆகவே தான் என்னை நினைவு செய்யுங்கள் மற்றும் ஆஸ்தியை எடுத்துக் கொள்ளுங்கள் என அடிக்கடி தந்தை சொல்கிறார். மன்மனாபவ, இது எவ்வளவு சகஜமான விஷயம். மனிதர்கள் ராமா ராமா என ஜபித்தபடி இருக்கின்றனர், மேலும் ராமராஜ்யத்தை வேண்டுகின்றனர். ஆனால் இப்படி ராமா ராமா என ஜபிப்பதன் மூலம் இராம இராஜ்யம் வராது. இப்படி கங்கைக் கரையில் அமர்ந்து ராமா ராமா என பிறவி பிறவிகளாக நிறைய ஜபித்தபடி வந்தீர்கள். இராமராஜ்யம் என சொல்லப்படுவது எது என யாருக்கும் தெரியாது. கண்டிப்பாக அந்த ராமன்தான் ராமராஜ்யத்தை உருவாக்குவார். அவர்களின் புத்தியில் சீதாலிராமனின் இராஜ்யம் வந்து விட்டது. அந்த (திரேதாயுக) ராமராஜ்யத்தில் ராமனுக்கே சுகம் இருக்கவில்லை. ராம ராஜாவின் சீதையே திருடு போய் (கடத்தப்பட்டு) விட்டாள் என்றால் பிரஜைகளின் நிலை என்ன ஆகும். இங்கே கூட ராஜாக்களின் மனைவிமார்கள் ஒருபோதும் திருடு போவதில்லை, அவர்கள் பிறகு ராமன் சீதையை சொல்லி விடுகின்றனர். இவை

மிகவும் புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும். உண்மையில் பரமபிதா பரமாத்மா தான் ராமன் எனப்படு கிறார். நீயே தாயும் தந்தையும் என பாடவும் செய்கின்றனர். இப்போது இப்படி பாடப்படக்கூடிய தாய் தந்தை யார்? ஒன்று லௌகிக தாய் தந்தையர். அவர்களை இப்படி மகிமை செய்ய மாட்டார்கள். மற்றொன்று கண்டிப்பாக பரம பிதா என ஒருவர் இருப்பார் அப்போது கண்டிப்பாக மாதாவும் (தாயும்) இருக்க வேண்டும். ஆக, பரலௌகிக தாய்லிதந்தை பற்றிய பாடல் இது. படைப்பவர் யார்? என கேட்கின்றனர். அப்போது இறைத்தந்தை என உடனே சொல்வார்கள். ஆக தாய் தந்தையர் உள்ளனர் என உறுதியாகிறது அல்லவா. இந்த சமயத்தில்தான் இரண்டு தாய் தந்தையர் இருக்கின்றனர். சத்யுகத்தில் ஒரு தாய் தந்தை மட்டுமே இருப்பர். லௌகிக தாய் தந்தை இருப்பினும் இங்கே நீயே தாய் தந்தை என பாடுகின்றனர். இந்த சமயம் குழந்தைகளாகிய நமக்கு தந்தை மூலம் அளவற்ற சுகம் கிடைத்து விடுகிறது, அதன் பிறகு ஒரு தாய் தந்தை என ஆகி விடும். பரலௌகிக தாய் தந்தையிடமிருந்து சத்யுகத்தின் பலனாக அளவற்ற சுகம் கிடைக்கிறது, அந்த தாய் தந்தையின் பாடல்தான் உள்ளது. எனினும் அப்படிப்பட்ட தந்தையை நினைவு செய்ய மறந்து விடுகின்றனர். பாபா வந்து விட்டார் என குழந்தைகளாகிய நீங்கள் அனைவருக்கும் தந்தையின் அறிமுகத்தைக் கொடுக்க வேண்டும். எப்போதும் சிவபாபா மற்றும் பிரம்மா பாபா என சொல்கின்றனர். பிரஜாபிதா எனும் பெயர் புகழ் வாய்ந்தது. சிவபாபா, பிரம்மா பாபா. லௌகிக தந்தை, அவர் பரலௌகிக பரமபிதா, பின் அவர் எப்படி தாய் தந்தை ஆகிறார் என்பது மிகவும் ஆழமான விஷயமாகும். யார் வந்தாலும் பரமபிதா பரமாத்மா உங்களுக்கு என்ன உறவு ஆக வேண்டும்? என முதலில் கேளுங்கள். பிரஜாபிதா உங்களுக்கு என்ன உறவு? அம்பா குப்தம் என்பது போல இந்த பிரம்மாவும் குப்தம் (மறைமுகம்). இந்த பிரம்மா பெரிய தாய். லௌகிக தந்தையின் பெயர், உருவம், காலம், தேசம் அனைத்தும் அனைவருக்கும் தெரியும். இப்போது நீங்கள் பரலௌகிக தாய் தந்தையின் பெயர், உருவம், காலம், தொழில் இவைகளைப் பற்றி அவர்களுக்கு சொல்லுங்கள். மம்மாவுக்கும் இவர் பெரிய மம்மா (தாய்). பெரிய மம்மாவின் மூலம் குழந்தை களைத் தத்தெடுக்கிறார், அப்போது தாய் தந்தை இணைந்தவர்களாக ஆகின்றனர். இவர்களை தாய் தந்தை அல்லது பாப்தாதா எனவும் சொல்கிறோம். பிறருக்கு புரிய வைக்க மிகவும் யுக்திகள் தேவைப்படும். நிராகார பரமபிதா பரமாத்மாவை அனைவரும் நினைவு செய்கின்றனர், ஆனால் அவர் எப்படி தாய் தந்தையாக ஆகிறார் என தெரியாது என பெரிய போர்டில் எழுத வேண்டும். இவ்வளவு கூட மனிதர்களின் புத்தி வேலை செய்வதில்லை. ஏனென்றால் விஷயங்கள் மிகவும் வியப்பானவை, அதனை தந்தைதான் வந்து சொல்கிறார். ஆத்மா சொல்கிறது. ஓ பரமபிதா பரமாத்மா, என்று அவரும் ஆத்மாதான் ஆனால் பரம (சுப்ரீம்) ஆத்மா ஆவார். சுப்ரீம் என்றால் பரம (உயர்ந்தவர்) என அர்த்தம். அவர் பரமதாமத்தில் இருப்பவர். அவர் பிறப்பு இறப்பில் வருவதில்லை, வந்து குழந்தைகளாகிய நம்மை தூய்மையற்ற பிறப்பு இறப்பிலிருந்து விடுவிக்கிறார். தூய்மையான பிறப்பு இறப்பிலிருந்து விடுவிப்பதில்லை. தூய்மையற்ற ஆத்மாவைத்தான் தூய்மையாக்குகிறார் ஆகையால் அவர் பதித பாவனர் (தூய்மை ஆக்கக் கூடியவர்) என சொல்லப்படுகிறார். மனிதர்கள் ராமன் சீதையின் அர்த்தத்தையும் கூட புரிந்து கொள்வதில்லை. உண்மையில் அனைத்து பக்தைகளும் சீதைகள் ஆவர். ஒரு

மணமகன் ஆகிய பரமாத்மாவை நினைவு செய்கின்றனர்.

தந்தை சொல்கிறார் : குழந்தைகளே, இந்த சமயத்தில் முழு உலகிலும் இராவண இராஜ்யம் உள்ளது. இலங்கையில் மட்டுமல்ல. இராவணனை எரிப்பதும் கூட இங்குதான். இலங்கை இந்து ஸ்தானத்தில் இல்லை. அது புத்த சமயத்தவர்களின் தனிப்பட்ட கண்டமாகும். ஆக இந்த சமயத்தில் முழு உலகமும் இராவணனின் பந்தனத்தில் உள்ளது. முழு உலகிலும் இராவணனின் இராஜ்யம் உள்ளது. அரைக் கல்பம் இராம இராஜ்யம், அரைக் கல்பம் இராவண இராஜ்யம். இந்த அனைத்து விஷயங்களையும் புத்தியில் வைக்க வேண்டும். இந்த சமயத்தில் நீங்கள் இராவணன் மீது வெற்றி அடைந்து கொண்டிருக்கிறீர்கள். யார் முழு வெற்றி அடைகின்றனரோ அவர்கள் எஜமானாக ஆவார்கள். சத்யுகத்தின் தொடக்கத்தில் லட்சுமிலிநாராயணரின் இராஜ்யம் இருந்தது. அவர்கள் இந்த சொர்க்கத்தின் பலனை எங்கிருந்து மற்றும் எப்படி அடைந்தனர்? சத்யுகத்தில் குறைவான மனிதர்கள் தான் இருப்பார்கள். சில இலட்சக்கணக்கில் தான் இருப்பார்கள். யமுனை நதிக்கரையில் இராஜ்யம் இருக்கும். அங்கே எந்த விகாரமும் இருக்காது. சம்பூரண நிர்விகாரி என சொல்லப்படுகிறது. யோகபலத்தின் மூலமே குழந்தைகள் பிறப்பார்கள். அங்கே அழுவதும் அடித்துக் கொள்வதும் கிடையாது. ஆனால் இந்த விஷயங்களை முதலில் வெளிப்படுத்தக் கூடாது. முதலில் இந்த விஷயத்தை எடுங்கள் நிராகார பரமபிதா பரமாத்மாவும் நாமும் பரலோகத் திலிருந்து வருகிறோம் எனும்போது பரலௌகிக பரமபிதாவுடன் உங்களின் சம்மந்தம் என்ன? முதல் விஷயம் இதுவேயாகும். முதலில் இந்த தந்தையின் விஷயத்தை எடுங்கள், அப்போது தாய் மற்றும் ஆஸ்தியின் சம்பந்தம் வெளிப்படும். ஒரு அல்லாவை மறப்பதன் மூலமே அனைத்தும் மறந்தீர்கள். இராவணன் முதன் முதலாக அல்லாவைத்தான் மறக்க வைத்தான், பின் அல்லாவின் உதவியின் மூலம் நாம் இராவணன் மீது வெற்றியடைகிறோம். புரிய வைப்பதற்கு நிறைய விஷயங்கள் உள்ளன. கண்காட்சியில் தந்தையின் முக்கியமான விஷயத்தைப் புரிய வைக்க வேண்டும். முதலில் அல்லா அதன் பிறகே ஆஸ்தி வருகிறது. தந்தையை புரிந்துக் கொள்ளா விட்டால் எவ்வளவு தான் சிரமப்பட்டு விளக்கினாலும் வேறெதையும் புரிந்துக் கொள்ள மாட்டார்கள். பரமபிதா பரமாத்மா என்றால் பிதாவிடமிருந்து ஆஸ்தி கிடைக்கிறது. பாபாவின் ஆஸ்தி கிடைத்தது என்றால் ஆஸ்தியின் உரிமை மிக்கவராக ஆகவே செய்கிறார்கள். திரிமூர்த்தி பற்றி புரிய வைப்பது எவ்வளவு எளிதானது. மேலே தந்தை நின்றிருக்கிறார், கீழே ஆஸ்தியாக லட்சுமிலிநாராயணர், இந்த விஷ்ணு நின்றிருக்கிறார். என்னை நினைவு செய்தீர்கள் என்றால் நீங்கள் இந்த ஆஸ்தியை அடைவீர்கள் என பாபா சொல்கிறார். பாபா நீங்கள் நிராகாரராக இருக்கிறீர்கள், நீங்கள் எப்படி ஆஸ்தியை கொடுப்பீர்கள் என குழந்தைகள் கேட்கின்றனர். குழந்தைகளே, நான் இந்த பிரம்மாவின் மூலம் கொடுக்கிறேன். யார் வந்தாலும் அவர்களுக்கு இந்த விஷயத்தைப் புரிய வையுங்கள். திரிமூர்த்தியினுடையதே முக்கியமான விஷயமாகும். திரிமூர்த்தி பிரம்மா என்பதற்கு அர்த்தமே கிடையாது. இவர் நிராகார சிவபாபா, இவர்தான் ஞானக் கடல் என சொல்லப்படுகிறார் என புரிய வைக்க வேண்டும். பின் இது ஆஸ்தியாகும். இப்போது தந்தை நிராகாரமாக (உடலற்றவராக) இருக்கிறார். பிறகு இந்த லட்சுமி நாராயணருக்கு எப்படி ஆஸ்தி கிடைத்தது, எங்கிருந்து வந்தது? நீங்கள் இங்கே தன்னை விஷ்ணு குமார் என சொல்வதில்லை. நீங்கள் பி.கு. க்கள்தான். மனிதர்களுடையதுதான்

பிரம்மாபுரி என சொல்லப் படுகிறது. அங்கே குறிப்பாக பிரமணர்களை படைக்கிறார். சிந்துவில் கூட பிரம்மாபுரி இருந்தது, இதனை யார் புரிய வைத்தது? (சிவபாபா) எப்போதும் பாப்தாதா என இணைத்துச் சொல்ல வேண்டும். ஒரு சமயம் பாபா, ஒரு சமயம் தாதா என சொல்வீர்கள். இரு ஆத்மாக்களுக்கும் ஒரு வாய் தான் உள்ளது அல்லவா. எப்போது யாருக்கு வேண்டுமோ அதனை பயன்படுத்துவார்கள். பந்தனம் கிடையாது. ஞானக்கடல் கீதையின் பகவான் தந்தை ஆவார் என்பது முதல் விஷய மாகும், அவர் சொல்கிறார்: இந்த பிரம்மா, விஷ்ணு, சங்கர் சூட்சுமவதனவாசிகளான தேவதைகள் ஆவர். இந்த பிரம்மா மனிதர் ஆவார், முழுமையடையும்போது தேவதை என சொல்வார்கள். இவர் தவம் செய்து பிறகு தேவதை ஆகிறார். இந்த பிரம்மா குமார், குமாரிகளுக்கு பிரம்மாவின் மூலம் பகவான் கற்பிக்கிறார். படங்களைக் கொண்டு நல்ல விதமாக புரிய வைக்க வேண்டும். புரிய வைப்பது மிகவும் சகஜமானது. இவர் சிவபாபா, இது ஆஸ்தி. இந்த சிவன் நிராகாரமானவர், ஆகையால் பிரம்மாவின் மூலம் கொடுக்கிறார். பிரம்மாவின் மூலம் சொர்க்கத்தின் ஸ்தாபனை. கண்டிப்பாக இப்போதுதான் இப்படி (சொர்க்கவாசி) ஆவதற்காக இராஜயோகம் கற்றுக் கொள்கிறோம். இது சிவபுரி, இது விஷ்ணுபுரி. நல்லது!

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. அல்லாவின் நினைவின் மூலம் இராவணனாகிய மாயையின் மீது வெற்றி அடைய வேண்டும் அனைவருக்கும் தந்தையின் அறிமுகத்தைக் கொடுக்க வேண்டும்.

2. நினைவின் யாத்திரையில் களைப்படையக் கூடாது. தனது பேட்டரியில் சக்தியை நிரப்பிக் கொள்வதற்காக சர்வசக்திவான் தந்தையை நினைவு செய்ய வேண்டும்.

வரதானம் : ஒரு தந்தையின் நினைவு மூலமாக ஒரே ரசனையின் நிலையை அனுபவம் செய்யக் கூடிய சாரத்தின் சொரூபம் ஆவீர்களாக.

ஒரே ரசனையின் நிலையில் நிலைத்திருப்பதற்கான எளிய விதியாவது ஒருவரின் நினைவு. ஒரு பாபா, இரண்டாமவர் என்று யாரும் இல்லை. எப்படி விதையில் எல்லாமே அடங்கியதாக இருக்கும், அதேபோல தந்தை கூட விதை ஆவார். அவருக்குள் சர்வ சம்பந்தங்களின் சர்வ பிராப்திகளின் சாரம் அடங்கி உள்ளது. ஒரு தந்தையை நினைவு செய்வது என்பது சார சொரூபம் ஆவது ஆகும். எனவே ஒரு தந்தை இரண்டாவமர் என்று யாருமில்லை லி இந்த ஒருவரின் நினைவு ஒரே ரசனையின் நிலையை அமைக்கிறது. யார் ஒரு சுகமளிக்கும் வள்ளலான தந்தை யின் நினைவில் இருக்கிறார்களோ, அவர்களிடம் துக்கத்தின் அலைகள் ஒரு பொழுதும் வர முடியாது. அவர்களுக்கு கனவுகள் கூட சுகத்தினுடையதாக, குஷியினுடையதாக, சேவையினு டையதாக, சந்திப்பை கொண்டாடுவதற்கானதாக கனவுகள் தான் வரும்.

சுலோகன்: சிறந்த நம்பிக்கைகளின் தீபங்களை ஏற்றுபவர்களே

உண்மையான குல தீபங்கள் ஆவார்கள்.

மாதேஷ்வரிஅவர்களின் விலை மதிப்பிட முடியாத மகா வாக்கியம்

பரமாத்மா மூலமாக ஏன் முதலில் லாட்டரியை வெற்றி அடையக் கூடாது?

பாருங்கள், நிறைய மனிதர்கள் சிறிதளவு முயற்சி செய்தால் கூட, நாங்கள் கூட வைகுண்டத்திலோ வந்து விடுவோம் அல்லவா? என்று நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் இவ்வாறு சிந்திக்க வேண்டும் - பரமாத்மா தந்தை வந்திருக்கிறார் என்றால் முழுமையான ஆஸ்தி பெற வேண்டும் என்றால் ஒரு மாணவருடைய வேலையாவது (கடமை) முழுமையாக முயற்சி செய்து ஸ்காலர்ஷிப் பெறுவது. எனவே ஏன் முதல் நம்பரில் லாட்டரியை வெற்றி அடையக் கூடாது. அந்த லாட்டரி என்பது வெற்றி மாலையில் கோர்க்கப்படக் கூடியவராக ஆவது. மற்றபடி இரண்டு லட்டு பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள் - இங்கு இருக்கக் கூடிய எல்லைக்குட்பட்ட சுகத்தையும் எடுத்துக் கொள்கிறேன், மேலும் அங்கு கூட வைகுண்டத்தில் கொஞ்ச நஞ்ச சுகத்தை பெற்றுக் கொண்டு விடுவோம் - இப்பேர்ப்பட்ட சிந்தனை உடையவர்களை நடுத்தரமான மற்றும் கீழ்த்தரமான முயற்சியாளர்கள். என்று தான் கூறுவார்களேயன்றி, சர்வோத்தம முயற்சியாளர்கள் என்று கூறமாட்டார்கள். தந்தை எப்படி அளிப்பதிற்கு மறுப்பதில்லையோ, பின் பெறுபவர்கள் ஏன் நழுவுகிறீர்கள்? அதனால் தான் குருநானக் கூறினார் - பரமாத்மாவோ வள்ளல் ஆவார், சக்திவான் ஆவார், ஆனால் ஆத்மாக்களிடம் எடுப்பதற்கான பலம் கூட இல்லை. கொடுப்பவர் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். ஆனால் எடுப்பவர்கள் களைத்து விடுகிறார்கள். நாம் கூட இந்த பதவியை அடையலாம் என்று நாம் ஏன் விரும்பமாட்டோம் என்று கூட உங்கள் மனதில் தோன்றக் கூடும். ஆனால் பாபா எவ்வளவு உழைப்பு செய்கிறார் என்பதை பாருங்கள். பிறகும் மாயை எவ்வளவு தடை ஏற்படுத்துகிறது, ஏன்? இப்பொழுது மாயையின் இராஜ்யம் முடியப் போகிறது. இப்பொழுது மாயை முழுமையாக எல்லா சாரத்தையும் நீக்கி விட்டுள்ளது. அப்பொழுது தான் பரமாத்மா வருகிறார். அவருக்குள் அனைத்து சுவையும் நிறைந்துள்ளது. அவரிடமிருந்து அனைத்து சம்பந்தங்களின் சுவை கிடைக்கிறது. அதனால் தான் த்வமேவ மாதாஸ்ச பிதா .. .. லி தந்தையும் நீயே, தாயும் நீயே போன்ற இப்பேர்ப்பட்ட மகிமைகள் அந்த பரமாத்மாவினுடையதாக இருக்கிறது. எனவே இதே நேரத்திற்கு தான் நாம் நன்றி கூற வேண்டி உள்ளது. ஏனெனில் இப்பொழுது தான் அப்பேர்ப்பட்ட சம்பந்தம் ஏற்பட்டுள்ளது. நல்லது. ஓம் சாந்தி.